DOC - 4 1

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051893

1. District : மாவட்டம் சென்னை    PS: காவல்நிலையம் V&AC. CC-II,    Year: ஆண்டு 2021    FIR No.: மு.த.அ. எண் 02/AC/2021/CC-II.    Date: நாள் 10.02.2021 at 15.30 hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act. 2018    Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: Sec. 7.
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 09.02.2021    Date to : நாள் வரை 09.02.2021
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் காலை சுமார் 10.00 மணி    Time to : நேரம் வரை மாலை சுமார் 16.00 மணி வரை.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.02.2021    Time : நேரம் காலை 10.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.02.2021    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சார் பதிவாளர் அலுவலகம். திருப்போரூர்.
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
சுமார் 38 km. தெற்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible]    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாதவன் (late)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு -    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் TCS, Chennai    (g) Address : முகவரி No. MIG 150, 7வது குறுக்கு தெரு. 4வது மெயின் ரோடு. [illegible], சென்னை-37.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திருமதி. செல்வசுந்தரி, சார்பதிவாளர், திருப்போரூர் சார்பதிவகம். திருப்போரூர்
2. திரு. [illegible], திருப்போரூர் சார்பதிவகம், திருப்போரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்க

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. விஸ்வக்குமார் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Visvakhumar 10.02.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 10.2.2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.02.2021.

Name: பெயர் M. VISVAKHUMAR
Rank: நிலை Inspector of Police, No. எண் .........
CC-II, VCAC, Chennai-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

....Continuation to column no.12 of FIR in No.02/AC/2021/CC-II.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார் ஆகிய நான் 10.02.2021-ந்தேதி காலை 10.00 மணிக்கு அலுவகத்தில் பணியிலிருந்தபோது சென்னை, முகப்பேர், 4வது மெயின் ரோடு, எண்.MIG150, 7வது குறுக்குதெருவில் வசிக்கும் திரு.ம.மயில்வேலவன் என்பவர் அலுவலகம் வந்து நேரடியாக கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 10.02.2021-ந் தேதி மாலை 15.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவர் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- விடுநர், ம.மயில்வேலவன், த/பெ. மாதவன் (லேட்), எண்.MIG150, 7வது குறுக்குதெரு, 4வது மெயின் ரோடு, முகப்பேர், சென்னை-37. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஆலந்தூர், சென்னை- 16. மதிப்பிற்குரிய ஐயா, நான் சென்னை முகப்பேரில் மேற்கண்ட விலாசத்தில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். கடந்த டிசம்பர் 2020ல் கூடுவாஞ்சேரியில் நெல்லிகுப்பம் பகுதியை சேர்ந்த திருமதி.பிரேமலதா என்பவருக்கு சொந்தமான எண்.31, நெல்லிகுப்பம் மெயின் ரோடு, அஸ்வினி அமன்னியா என்ற அடுக்குமாடி குடியிருப்பில், 3வது தளத்தில் உள்ள பிளாட்டினை ரூ.27,00,000/லட்சத்திற்கு பேசி முடித்து, என் மனைவி A.தாய் அபிநயா அவர்களின் பெயரில் பதிவு செய்ய முடிவு செய்தேன். அதற்கான ஆவணங்களை எனக்கு தெரிந்த வால்டாக்ஸ் ரோட்டில் அலுவலகம் வைத்துள்ள வழக்கறிஞர் ஒருவரிடம் தயார் செய்து, அவர் மூலமாகவே பத்திரப்பதிவு செய்ய ஆன் லைனில் 02.01.2021ந் தேதியன்று விண்ணப்பித்தோம். எங்களுக்கான பத்திரப்பதிவு தேதி 07.01.2021ந் தேதி திருபோரூர் பத்திரப்பதிவு அலுவலகம் என பதிவாகி வந்தது. அதன்படி ஆவணங்களுடன் நானும், என் மனைவியும், என் மாமானாருடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரப்பதிவுக்காக சென்றிருந்தோம். எங்களை 04.00 மணியளவில் அலுவலக நபர் என் மனைவியின் பெயரை சொல்லி பதிவுக்கு அழைத்தனர். எங்களை சார்பதிவாளர் திருமதி.செல்வசுந்தரி அவர்களை சந்திக்கும்படி தெரிவித்தனர். அதன்படி சார்பதிவாளரை சந்தித்தபோது,எங்களின் ஆவணங்களை அவர் சரி பார்த்துவிட்டு, கட்டணதொகை ரூ.3,00,835/-ஆகும் என்றும், அதில் ஆவணத்திற்கான தொகை ரூ.25,000/- ஐ கழித்துவிட்டு, ரூ.2,75,835/-ஆன் லைன் மூலம் அரசாங்கத்திற்கு செலுத்த சொன்னார். அதன்படி அவர்கள் சொல்லியபடியே நாங்கள் அன்றே கட்டணதொகை செலுத்திவிட்டோம். அதற்கான ரசீதையும் (ரசீதுஎண்.206/2021) எங்களிடம் அங்கிருந்த பிரபு என்பவர் ஒப்படைத்து விட்டு, நாங்கள் கட்டிடத்தை மதிப்பீடு செய்துவிட்டு SMS அனுப்புவதாக தெரிவித்து அனுப்பி விட்டனர். அதையடுத்து எந்தவொரு SMS வராததால், நான் கடந்த 25.01.2021 அன்று நேரில் சென்று பிரபு அவர்களை சந்தித்தேன். பிரபு அவர்கள் களப்பணி முடிவடையததால் மேலும் சிலநாட்கள் கழித்து வரும்படி தெரிவித்து அனுப்பிவிட்டார். நாங்கள் வங்கிகடன் மூலம் வீட்டை வாங்கியிருந்ததால், Bank of Baroda வங்கியிலிருந்து பத்திரம் கேட்டுகொண்டிருந்தனர். பத்திரப்பதிவு அலுவலகத்திலிருந்து எந்தவொரு தகவலும் வராததால் மறுபடியும் கடந்த 03.02.2021ந் தேதியன்று மீண்டும் நேரில் சென்றபோது பிரபு அவருடைய செல்போன் எண்.9080551299 கொடுத்துவிட்டு, அவரை போனில் அழைத்துவிட்டு 05.02.2021ந் தேதி வரும்படி என்னை

அனுப்பிவிட்டார். நான் 05.02.2021ந் தேதியன்று பிரபு அவர்களை தொடர்பு கொண்டபோது, என்னை கடந்த செவ்வாய் 09.02.2021ந் தேதியன்று காலை வரும்படி கூறினார். அதன்படி நான் 09.02.2021ந் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு, திருபோரூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பிரபுவை பார்த்தபோது, அவர் நாங்கள் வாங்கியுள்ள பிளாட்டின் ஆய்வில் அதன் மதிப்பீடு குறைவாக உள்ளதாகவும், அதற்காக மேலும் ரூ.80,000/வரை பணம் செலுத்த வேண்டியிருக்கும் சார்பதிவாளரை சந்தித்து பேசுமாறு தெரிவித்தார். நானும் உடனே சார்பதிவாளர் திருமதி.செல்வசுந்தரி அவர்களை பார்த்து நீங்கள் சொன்ன மதிப்பீட்டை தான் நாங்கள் ஆவணத்தில் குறிப்பிட்டோம். ஆனால் இப்போது மதிப்பீடு குறைவாக உள்ளதாக தெரிவிக்கிறீர்கள் என்று சொன்னேன். அதற்கு சார்பதிவாளர் அவர்கள் இல்லை, நீங்கள் மேலும் ரூ.83,720/ ஐ செலுத்த வேண்டியுள்ளது. அதனை குறைக்க வேண்டுமானால் அவருக்கு தனியாக ரூ.10,000/ கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தார். நான் மேலும் கட்டவேண்டிய தொகை அதிகமாக உள்ளது என்று தெரிவித்ததால் சார்பதிவாளர் அவர்கள் நான் மேலும் செலுத்த வேண்டிய கட்டண தொகையை கணித்து சொல்வதாகவும், என்னை காத்திருக்கும் படியும் தெரிவித்தார். நான் மதியம் முழுவதும் காத்திருந்துவிட்டு, மாலை சுமார் 04.00 மணிக்கு சார்பதிவாளர் அவர்களை சந்திக்க சென்றபோது, பிரபு அவர்கள் என்னிடம் சார்பதிவாளர் கட்டணதொகையை ரூ.16,651/ ஆக குறைத்து விட்டதாகவும், அதனை ஆன் லைனில் செலுத்திவிட்டு, தனக்கு தனியாக ரூ.1,000/மும், சார்பதிவாளர் திருமதி.செல்வசுந்தரி அவர்கள் கேட்ட ரூ.10,000/-மும் ஆன் லைனில் செலுத்தியதற்கான ரசீதியையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஆவணத்தை பெற்று செல்லுமாறு கூறினார். என்னுடைய ஆவணத்தை தருவதற்கு அவர்கள் இருவரும் கேட்ட லஞ்சபணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால், திருபோரூர் சார்பதிவாளர் திருமதி.செல்வசுந்தரி மற்றும் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் பிரபு ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd. (XXX) M.மயில்வேலவன், 10.02.2021. Sir, Received a complaint on 10.02.2021 at 10.00 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City –II, Cr.No.02/AC/2021/CC-II, U/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 10.02.2021 at 15.30 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16.

The original FIR along with complaint submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpet and other copies submitted to officer concerned.

M.Visvakhumar
10.02.2021
Inspr. CC II, V&AC, Chn-16